(கு.வி.மு.ச.அத்தியாயம் XXIII)

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், இராதாபுரம்

ஆண்டுப்பட்டிகை
பல்வகை
முதன்மைப் பதிவேடு
அமர்வு

STC.No. 201/2022

எதிரி தரப்புக்காக சாட்சியின் சான்றுரைகள் DW– 4

பெயர் : செந்தில்குமார்

த/பெ : ராஜேந்திரன்

(எதிரி ஆஜர் இல்லை கு.வி மு.ச பிரிவு 317 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

2025ம் ஆண்டு ஜனவரி திங்கள் 31 ஆம் நாளன்று, 1969 ஆம் ஆண்டு உறுதி மொழி சட்டம் (மையச் சட்டம் 44/1969)–ன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கப்படுகிறது.

**குறுக்கு விசாரணை** :–

1) நான் செந்தில் ஸ்டீல் நிறுவனத்தில் காசாளராக பணி செய்து வருகிறேன். நான் காசாளராக 2009 முதல் 2022ம் வருடம் வரை பணி செய்து வந்தேன். எதிரி நிறுவன வரவு செலவுகள் அனைத்தும் உங்களுக்கு தெரியும் என்றால் சரிதான். செந்தில் ஸ்டீல் நிறுவனத்தின் உரிமையாளர் உங்கள் அப்பா என்றால் சரிதான். காசோலை திருப்பப்பட்டதை பொறுத்து வழக்கறிஞர் அறிவிப்பு உங்கள் நிறுவனத்திற்கு அனுப்பட்டது என்றால் சரியல்ல. ஈரோடு திருநகர் காலனி, கே.எஸ்.எஸ் மகாலில் எதிரில் கதவு எண்.75/32 கண்ணையன் தெரு, என்ற முகவரி எதிரியின் நிறுவனத்தின் முகவரி என்றால் சரிதான். ஈரோடு, கிருஷ்ணம்பாளையம், அருள்நிதி பள்ளி எதிரில் 45/2 கல்யாண சுந்தரம்

நகர் அங்கு லட்சுமி இல்லம், என்ற முகவரியில் உங்கள் அப்பாவின் முகவரி என்றால் சரியல்ல, என் அண்ணனின் முகவரி ஆகும்.

2) காசோலை திருப்பட்ட அறிவிப்பு உங்கள் முகவரிக்கு சார்பு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கு தொடங்குவதற்கு முன்பு வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு கிடைக்கப்பெற்றது. அந்த அறிவிப்பிற்கு பதில் அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை என்றால் சரிதான். காசோலை வேறு நபருக்கு கொடுக்கப்பட்டது அதை புகார்தாரர் தவறாக பயன்படுத்தி அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்று குற்ற நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. எதிரியின் நிறுவன காசாளர் என்பதால் எதிரி எடுக்கும் நடவடிக்கை உங்களுக்கு தெரியும் என்றால் சரிதான். எதிரி ஈரோடு, சார்பு நீதிமன்றத்தில் நொடிப்பு நிலை மனு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். வழக்கு மேற்கண்ட மனு தாக்கல் செய்த போது அதை பொறுத்து எதிரி என்னிடம் கேட்கவில்லை.

3) அந்த மனுவின் விபரங்கள் எதுவும் எனக்கு தெரியாது. மேற்படி விபரங்கள் உங்களுக்கு நன்றாக தெரியும் என்றாலும், நீங்களும் உங்கள் அப்பாவும் கலந்து ஆலோசித்து மனு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. அந்த மனுவில் 3வது எதிர்மனுதாரராக வழக்கின் புகார்தாரரை சேர்த்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்கண்ட மனுவை கூட்டு சதி செய்து ஈரோட்டில் தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. இந்த வழக்கின் மனுதாரரை அந்த மனுவில் 3வது எதிர்மனுதாரராக சேர்த்துள்ள நிலையில் அவருக்கும், எதிரிக்கும் இடையே உள்ள பண பரிவர்த்தனை ஒப்புகொள்ளப்பட்டுள்ளது என்றாலும், இருவருக்கும் இடையே உள்ள பண பரிவர்த்தனை ரூ.27,00,000/- என காட்டப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

4) என்னிடம் காட்டப்படும் எ.ம.சா.ஆ.1 2017 வருடம் நான் காசாளராக நியமிக்கப்பட்டதாக உள்ளது. தற்போது வரை நீங்கள் தான் காசாளர் என்றால் சரியல்ல. எதிரி ஆகிய உங்கள் அப்பாவின் நிதி நிலைமை உங்களுக்கு தெரியும் என்றாலும் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

காசோலை எண். 043866, 043867 ஆகிய இரண்டு காசோலைகள் விநாயகா டிரேடர்ஸ்க்கு கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். எ.ம.சா.ஆ.2 காசோலை அடிக்கட்டையில் காசோலை பெற்றுக்கொண்டதாக அவர் கையொப்பம் எதுவும் செய்யவில்லை என்றால் சரியல்ல. நீங்கள் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

(ஒம்.)திரு.மு.ஆனந்த்,பி.ஏ.,பி.எல்.,
மாவட்ட உரிமையியல் (ம)
குற்றவியல் நடுவர் நீதிமன்றம்,
இராதாபுரம்.